**மஹாஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 யூலை 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹாஓயா பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2013 இன் தெயட்கிருல (தேசத்திற்கு மகுடம்) அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட மஹாஓயா பேருந்து நிலைய கடைகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மஹாஓயா பேருந்து நிலையத்தின் உரித்தை பிரதேச சபை கையேற்றிருந்த போதும், அதன் பெறுமதி தொடர்பாக எந்தவொரு ஆவணமும் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அப்பெறுமதி எங்களுக்கு கிடைத்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மடுகல பிளிசறு நிலையத்தை சுற்றி யானை வேலி அமைக்கும் வேலைக்காக செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 1,099,790 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான ரூபா 186,885 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 670,280 தொகையான நுகர்வுப் பொருட்கள் மோட்டார் வாகனம் மற்றும் வண்டியின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய சம்பளம் ரூபா 358,360 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மீளாய்வாண்டின் இறுதியில் கடை வைப்புக்கள் ரூபா 328,385 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செலுத்தவேண்டிய கணக்குகள் | | |
| 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 332,675 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 126,125,326 தொகையான 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,817,796 தொகையான 02 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் பதிவேடுகளை தயாரித்து நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) | 126 ஆம் பிரிவு | - | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உப விதிகள் விதித்து உரிய செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கூட்டுப்பசளை உற்பத்தியை அதிகரித்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 159 ஆம் பிரிவு | 3,163,087 | பிரதேச சபைக்குச் சொந்தமான 69 கடைகளின் நிலுவைக் கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது கெகிரிஹேனயில் 24 கடைகள் தவிர ஏனைய 45 கடைகளில் இருந்து கடை வாடகை அறவிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 875,715 | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய 154 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த வைப்புக்களை மீண்டும் வருமானத்திற்கு எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2016 திசெம்பர் 29 | - | பிரதேச சபைக்குச் சொந்தமான 10 | சுற்றறிக்கையின் பிரகாரம் | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | | வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்ட 63 கடைகளின் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகள் இறுதியாக 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் கடைகளை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 96,551 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,465,381 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 450,000 | 591,000 | 591,000 | - | 400,000 | 439,200 | 439,200 | - |
| (ii) | வாடகை | 9,247,200 | 11,715,822 | 8,552,735 | 3,163,087 | 7,531,343 | 8,179,086 | 6,743,169 | 1,435,927 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 340,500 | 332,358 | 332,358 | - | 290,400 | 348,764 | 348,764 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,693,400 | 7,292,460 | 6,623,235 | 669,225 | 5,043,869 | 8,215,727 | 7,860,876 | 354,852 |
| | | <u>15,731,100</u> | <u>19,931,640</u> | <u>16,099,328</u> | <u>3,832,312</u> | <u>13,265,612</u> | <u>17,182,777</u> | <u>15,392,009</u> | <u>1,790,779</u> |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசம் அடிப்படை வசதிகளைக்கொண்ட பிரதேசமாக இருந்த போதிலும் சபையினால் இது வரை ஆதன வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி அறவிடுவதற்காக தேவையான ஏற்பாடுகளை வழங்குதல் பொருத்தமானதாகும். | 2018 யூலை மாதம் நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது 2018/07 எஸ் டீ /08 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் கீழ் ஆதன வரி விதிப்பதற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவினால் ஆதன வரி அறவிடுவதற்காக பொருத்தமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு 2019 ஏப்ரல் மாதம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி அதற்காக அங்கீகாரம் வழங்குதல் சபையினால் காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. ஆதன வரி அறவிடுவதற்காக இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்காக சபை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

**(அ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 324,850 ஆகும். | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019.12.31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 324,850 தொகையான முத்திரைக் கட்டணத்தை மீளளிச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் | உப விதிகள் விதிக்கப்படாத | தற்போது விதிக்கப்பட்டுள்ள 05 உப விதிகளுக்கு |

| | | |
|---|---|---|
| பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 05 விடயங்களுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | மேலதிகமாக மேலும் 08 உப விதிகளை தயாரிப்பதற்காக 2020.07.10 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடத்திற்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலத்திற்கு நாளது வரையாக்கப்பட்ட பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெகிரிஹேன வாராந்த சந்தையின் 24 கடைகள் 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை செய்யப்பட்டு வாடகையாளர்களுக்கு | நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை | மஹாஓயா கெகிரிஹேன கடை வாடகையின் அடிப்படையில் வழங்கப்பட்ட போதிலும், விற்பனை நடவடிக்கைகளுக்காக இது வரை திறக்கப்படாதிருந்தமையினால் 2019.09.12 ஆம் திகதி நடைபெற்ற |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டிருந்த போதும் மேற்கூறப்பட்ட கடைகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப் பணம் ரூபா 2,165,428 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | மாதாந்த சபை கூட்டத்தின் மூலம் 2019.09.12 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகையான ரூபா 1,905,733 தொகையை பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானம் 2019.10.28 ஆம் திகதி பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் எனக்கும் அந்த தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் வழங்குமாறு அறிவித்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்ட போதிலும், இது வரையில் அந்த கடிதத்திற்கான பதில் கிடைத்திருக்கவில்லை. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 பதவிகளில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் வரை சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 25,359 தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 25,359 தொகையை அறவிடுவதற்கு அந்த உத்தியோகத்தர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன் அவர்கள் அந்த தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | சபையினால் நிரந்தர அடிப்படையில் 1996 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 04 வீதித் தொழிலாளர்கள் மற்றும் 03 சுகாதார தொழிலாளர்கள் உரிய கடமைகளில் ஈடுபடுத்தாமல் ஏனைய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்க்கப்படுகின்ற தொழிலாளர்கள் அவர்களுக்குரிய கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | மஹாஓயா பிரதேச சபையின் பதவியணியினர் போதியளவில் இல்லாதிருந்தமையினால் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் உள்ளபடியான பதவியில் ஈடுபடுத்தாது தேவையின் அடிப்படையில் கடமைகளுக்காக ஏனைய கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப்பசளைத் தளத்திற்காக நீரை பெற்றுக் கொள்வதற்காக அம்பாறை நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 828,115 தொகை மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீர் வசதிகளை வழங்காதிருந்தமையின் காரணமாக அந்த இடத்தில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளுக்குத் தேவையான நீரை சபைக்குச் சொந்தமான பௌசர் வாகனத்தின் மூலம் போக்குவரத்து செய்வதற்கு ஏற்பட்டமையினால் அதற்காக மேலதிக செலவினமொன்றை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | விரைவாக கூட்டுப்பசளைத் தளத்திற்காக நீர் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூட்டுப்பசளைத் தளத்தில் குளாய் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டு நீரைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை நிதியினை வழங்கியிருந்ததுடன் அந்த நிலையத்தை பரீட்சிப்பதற்கு வருகை தந்த நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகத்தர்கள் அந்த இடத்தில் குளாய் கிணறொன்று நிர்மாணித்தல் பொருத்தமற்றது என கூறியதன் காரணமாக அந்த இடத்திற்கு குளாய் நீரை வழங்குமாறு நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை எழுத்து மூலம் பல தடவைகள் கோரப்பட்டிருந்த போதும், இது வரையிலும் நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரித்தை கையேற்பது தொடர்பாக சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் கௌரவ சபைக்கு கடிதம் ஒன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 36 காணிக் கூறுகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | பிரதேச சபைக்குரிய சகல காணிகளையும் கையேற்பதற்கு கோரப்பட்டுள்ளது. |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய 02 மோட்டார் சைக்கள்கள் 10 வருடங்கள் அளவிலான காலம் முதல் எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | வாகனங்களை பயன்படுத்துதல் வேண்டும். | வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் காணப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதுள்ளது. |

**3.5.3 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வாகனங்களின் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டிற்காகவும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |